[டாக்டர் எச். வி. ஹண்டே] [1981 மார்ச் 7

இருந்தாலும், முழுமையாக 12 விபரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த அரசு விரைவாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்ற மன நிறைவு ஏற்படும் என்று கருதுகிறேன்.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது!

(1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நில வரி வசூல் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 5/1981);

(2) 1981 ஆம் ஆண்டு பத்திரப்பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 10/1981);

(3) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கால்நடை நோய்கள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 14/1981).

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(1) கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன் வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 2/1981) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது என்று கருதுகிறேன். ஏற்கனவே இந்த மன்றத்தில் நானும், மற்ற உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லியது போல இந்தச் சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுவதாக

---

*1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27—ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.